**தலைப்பு 128 - பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியின் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள்,

இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் பேணிச்செல்லலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,130.94 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 1,116.89 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 14.05 மில்லியன் அல்லது மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 1 சதவீதமான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 699.54 | 698.88 | 0.66 | 0.09 |
| மூலதனம் | 431.40 | 418.01 | 13.39 | 3.10 |
| **மொத்தம்** | **1,130.94** | **1,116.89** | **14.05** | **1.24** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

--------------------------------

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

------------------------------------------------------------------------------------

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

------------------------------------------------------------------

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12801 | 7.50 | 5.19 | 2.50 | 3.68 | 25.00 | 13.25 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

---------------------------------------

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1,708,659 ஆகும். 2015 ஏப்ரல் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சினால் அந்த மீதியில் ரூபா 810,130 தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பொதுவைப்புக் கணக்கு

--------------------------------------

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,594,283 ஆகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

---

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 128 – பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு

---

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

---

அமைச்சினால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டு கணக்கு

---

#### 3.2.1 பாதீட்டு முரண்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 598,030 தேறிய நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

விடய இலக்கம் 12801 கொண்ட முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 481,969 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதி 01 முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததெனினும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

**3.4 நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்**

---

**3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 உள்ளகக் கணக்காய்வு**

---

அமைச்சால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2011 மே 08 ஆம் திகதி முதல் 2015 மே 31 ஆம் திகதி வரையான 04 ஆண்டுகளுக்கு மேலான காலமாக வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2009 யூன் 09 ஆம் திகதிய டீளம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்து முகாமைத்துவம்

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்தி அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அமைச்சினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

#### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | பெறுமதி<br>ரூபா | காலப்பகுதி |
|---|---|---|---|
| கட்டிடம் ஏனைய சொத்துக்கள் | கூட்டுறவு மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு | மதிப்பிடப்பட்டிருக்கவில்லை | 2013 ஆம் ஆண்டு முதல் 2015.01.08 வரை |
| வாகனம் | நோத்சீ நிறுவனம் - வீரவில | மேற்படி | 2012.09.17 |
| வாகனம் | நோத்சீ நிறுவனம் - லுனுவில | மேற்படி | 2012.06.13 |
| வாகனம் | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - மொனராகலை | மேற்படி | 2013.08.06 |

| | | | |
|---|---|---|---|
| வாகனம் | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - இரத்தினபுரி | மேற்படி | 2013.09.30 |
| வாகனம் | பனை அபிவிருத்தி சபை | மேற்படி | - |

## 3.6 இணக்கமின்மைகள்

-----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்படுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கிருந்த ரூபா 337,803 சேதநட்டங்கள் தொடர்பில் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

------------------------------------------------------------------------------------------------

**செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

----------------------------------------------------------

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(அ) அம்பாந்தோட்டை மெதமூலன தும்பு சார்ந்த உற்பத்திக் கிராமத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2.1 மில்லியன் மதிப்பீடொன்றின் அடிப்படையில் திட்டமிடப்பட்டிருந்ததெனினும், வசதிப் பற்றாக்குறையால் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) காலி, ஹபராதுவ, வெள்ளத்தரகொட தும்பு சார்ந்த உற்பத்திகள் கிராமம் ரூபா 9 மில்லியன் மதிப்பீடொன்றின் அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், போதியளவிலான நலனாளிகள் எண்ணிக்கை இல்லாதிருந்தமையால் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(இ) கொழும்பு, பனாலுவ கைத்தொழில் கிராமத்தின் உள்ளக வீதிகள் மற்றும் கால்வாய்களை புதுப்பிப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பு அணையொன்றினை நிர்மாணிப்பதற்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 2 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்தினபுரி, புஸ்செல்ல கைத்தொழில் கிராமம் மற்றும் மாத்தளை களுதாவலை கைத்தொழில் கிராமத்தை சுற்றிலும் வேலியொன்றினை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 500,000 மற்றும் ரூபா 700,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நுவரெலியா, கொட்டகலை கைத்தொழில் கிராமத்திற்காக ரூபா 700,000 தொகையான செலவில் பாதுகாப்பு கூடாரத்தினை நிரமாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், அந்த கூடாரத்தினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.8 செயலாற்றல்

----------------------

2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் ஆகியவற்றின் பிரகாரம், அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்பாந்தோட்டை, பெலிஅத்த, அகுல்மடுவ அரக்கு உற்பத்தி கிராமத்தில் இனங்கண்ட 40 நலனாளிகளுக்கு உபகரணங்கள், மூலப்பொருட்கள், அடிப்படை வசதிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 2 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 532,670 செலவிடப்பட்டிருந்தது. வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத இந்த செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் 27 சதவீத முன்னேற்றத்தைப் பெற்றிருந்தன.

(ii) கண்டி நீலவல தங்க ஆபரண உற்பத்தி கிராமத்தின் நலனாளிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பொது வசதிகள் நிலையத்தினுள் 120 சதுர அடி

அளவிலான நிலப்பரப்பு எதுவித அங்கீகாரமோ கொடுப்பனவோ இன்றி கிராம உத்தியோகத்தரொருவரால் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

-----------------------------------------------------------------------------

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு.

**(i)** கண்டி கலாசிறிகம சணல் சார்ந்த உற்பத்தி கிராமத்தின் பொது வசதிகள் நிலையம் அமைந்திருந்த காணியை சட்டரீதியாக கையேற்காமையால் அந்த காணியை சுற்றிலும் ரூபா 800,000 செலவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ii)** கம்பஹா அத்தனகல்ல அலவல சங்கீத உபகரணங்கள் உற்பத்தி கிராமத்தில் 20 வேலைத்தளங்களுக்காக அடிப்படை வசதிகள் அபிவிருத்தியின் கீழ் மின்சாரம் வழங்குவதற்காக ரூபா 580,000 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த பணியினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii)** மினுவான்கொட, பொல்வத்த மட்பாண்ட கிராமத்தின் நலனாளிகளுக்காக நடமாடும் மண் அரைக்கும் இயந்திரமொன்று 2014 மே மாதமளவில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இயந்திரத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,145,005 தொகை செலவிடப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த இயந்திரங்களை நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திட்டமிடல்**

----------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிராத சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு.

**(i) கைப்பணிப் பொருட்கள் கைத்தொழில் கிராமத்தின் அபிவிருத்தி**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 05 கைப்பணிப் பொருட்கள் கைத்தொழில் கிராம செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட கிரயம் ரூபா 150,000 எனினும், அதற்காக ரூபா 1,917,190 செலவிடப்பட்டிருந்தது.

- 22 கைப்பணிப் பொருட்கள் கைத்தொழில் கிராமங்களின் மேற்பார்வை, இணைப்பு மற்றும் மதிப்பீடு போன்றவற்றிற்கான கிரயம் ரூபா 1 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 2,630,609 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட கிரயம் 163 சதவீதத்தால் மிகைத்திருந்தது.

**(ii) மட்பாண்டக் கைத்தொழில் கிராமங்களின் அபிவிருத்தி**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- உடுபத்தாவ மடவலாகாரய கிராமத்தின் வடிவமைப்பாளர்களுக்காக 59 விறகு உலைகளை வழங்குவதற்காக ரூபா 1.2 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததெனினும், தலைமை அலுவலகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அந்த பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- நாவுல தொடம்அத்தாவலயிலுள்ள 20 நலநாளிகளுக்காக வேலைத்தளங்களை பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 1.2 மில்லியன் இலக்கிடப்பட்டிருந்ததெனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 வரையான குறைவாக எண்ணிக்கையுடைய வேலைத்தளங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தன.

- 2014 யூலை மாதமளவில் கடுவலை ரனாலையில் 10 வேலைத் தளங்களை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வேலைத்தளங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(iii) கிதுல் அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மரம் ஏறும் போது ஏற்படும் அவசர விபத்துக்களினால் ஏற்படும் இடர்களுக்காக நட்டஈட்டினை பெற்றுக்கொடுக்கும் படிமுறையொன்றாக 1,000 கிதுல் கைத்தொழிலாளர்களுக்காக காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அந்த கிதுல் தொழிலாளர்களில் 113 பேருக்கு மாத்திரம் காப்புறுதி வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 11 சதவீதம் மாத்திரம் வெற்றியளித்திருந்தது.

- நான்கு கிதுல் உற்பத்திக் கிராமங்களை மீள செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 150,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அது மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த கிராமங்களையும் மீள செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கொழும்பு மாவட்டத்தில் ரூபா 500,000 செலவில் 05 கிதுல் நாற்று மேடைகளை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பொருத்தமான இடமொன்றினை தேடிக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டமையால் எதுவித கிதுல் நாற்று மேடையும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. வேறொரு மாவட்டத்திலேனும் நாற்று மேடையினை உருவாக்குவதற்கு பொருத்தமான இடமொன்றினை தேடிக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டில் 20,000 கிதுல் கன்றுகளை தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், வனப் பாதுகாப்பு திணைக்களத்துடன் இது தொடர்பில் இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்காமையால் 1,025 கன்றுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

- 1,000 பாதுகாப்பு வளையங்கள் மற்றும் கத்திகளை கிதுல் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 4.5 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 4.73

மில்லியன் செலவிடப்பட்டு 476 பாதுகாப்பு வளையங்கள் மற்றும் கத்திகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

- மீளாய்வாண்டின் போது 10 கிதுல் கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளுக்காக இலங்கை தரச்சான்றிதழ் (SLS) வழங்குவதற்காக ரூபா 500,000 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், ஒரு கிதுல் கைத்தொழிலாளருக்கேனும் தரச்சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (iv) கைத்தொழில் கிராமங்கள்

---

பிரதான மற்றும் சிறு கைத்தொழில் கிராமங்களின் அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் மூலம் 05 பிரதான கைத்தொழில் கிராமங்கள் மற்றும் 08 சிறு கைத்தொழில் கிராமங்களின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தலின் கீழ் களுதாவலை மாத்தளை சிறு கைத்தொழில் கிராமத்தின் உள்ளக வீதிக் கட்டமைப்பினை புனரமைப்பதற்காக ரூபா 4.7 மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் 40 சதவீதமான குறைந்தளவான செயன்முன்னேற்றமொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 3.9 நிதி மோசடிகள் வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடக்கு மாகாணத்தில் பனை சார்ந்த உற்பத்திகளில் தங்கியுள்ள 70,000 குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக பனை அபிவிருத்தி சபைக்கு ரூபா 6,000,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், ஹோட்டல் கட்டணங்களை செலுத்துதல், போக்குவரத்திற்காக எரிபொருள் பெற்றுக்கொடுத்தல், பனை ஓலைகளை கொள்வனவு செய்வதற்காக போலியாக தயாரிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், ஆவணங்கள் மற்றும் போலியான கையொப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 593,108 தொகையான கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், பனை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட

ரூபா 6,000,000 தொகை வடக்கு மாகாணத்தில் பனை சார்ந்த உற்பத்திகளில் தங்கியுள்ள 70,000 குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட போலியான பதிவேடுகளை தயாரித்தல், போலியான கையொப்பமிடல், தவறான பட்டியல்களை சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பில் நிதிப் பிரமாணம் 103(1)(ஆ) இன் பிரகாரம் பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உள்ளபடியான பதவியணி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 12 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 398 | 314 | 84 |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 24 | 08 |
| | **மொத்தம்** | **453** | **352** | **101** |

### (ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

அமைச்சால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| **ஊழியர் வகை** | **எண்ணிக்கை** | **வேறு தரப்பினர்** | **விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி** |
|---|---|---|---|
| அபிவிருத்தி உதவியாளர் | 01 | தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு | 2012 ஒக்தேபர் |

**(இ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சால் அரச நிறுவனமொன்றின் தலைமை அலுவலகத்தில் இணைப்புச் செய்யப்பட்டிருந்த சாரதி ஒருவர் 2011 ஏப்ரல் முதல் 2015 சனவரி 09 ஆம் திகதி வரையான 03 ஆண்டுகளுக்கு மேலான காலமாக முறையற்ற விதத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.